# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டம்

---

*[1983, சனவரி மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1983, சனவரி மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : சதம் 20** தபாற் செலவு : சதம் 50

## 1983 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டம்

[1983, சனவரி மாதம் 27 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஆ 11/82
1505

**1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின் வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டமானது, 1983 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

**1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப் பிடு செய்யப்படும், 1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, புலமைச் சொத் துச் சட்டக்கோவைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாக பின்வரும் உட் பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகிறது :—

"(3) பதிவாளரானவர்—

(அ) அமைச்சரின் பணிப்புரைகளுக்கு அமைய, இச்சட்டக் கோவையின் ஏற்பாடுகளின்கீழ் கைத்தொழில் வடிவ அமைப்புக்கள், ஆக்கவுரிமைகள், குறிகள் பதிவு செய்த லினதும், இச்சட்டக்கோவையின் ஏற்பாடுகளை நடை முறைப்படுத்துவதற்கென நியமிக்கப்பட்டவர்களான அல் லது நடைமுறைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளவர்களான எல்லா ஆட்களினதும் பொதுவான கட்டுப்பாடும் கண் காணிப்பும் உரித்தாக்கப்படுபவராதல் வேண்டும்; அத் துடன்

(ஆ) கண்காட்சிகள், போட்டிகள், கருத்தரங்குகள், வெளியீடு களை ஒழுங்குசெய்வதன்மூலமும், பதிப்புரிமையைக் காத்தற்காக கழகங்களை அமைப்பதன்மூலமும் பதிப் புரிமை எனும் விடயத்தில் ஒரு தேசிய விழிப்புணர்வை வளர்ப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் அவசியமான எல்லா நடபடிகளையும் எடுத்தல் வேண்டும்.".

**திருத்தம் கடந்த காலத்தையும் உள்ளடக்கிப் பயனுறுதல்.**

3. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தமானது, எல்லா நோக்கங்களுக்குமாக முதன்மைச் சட்டவாக்கம் நடைமுறைக்கு வந்த தேதியன்று நடைமுறைக்கு வந் துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

எ — 66525—6,950 (11/82)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடச் சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.